# திருநாரணன் திருவந்தாதி




**அம்ருதவல்லி நாயிகா சமேத த்ரிவிக்ரம பரப்ரஹ்மணே நம :**

உண்மையே !!

மூவடி யளந்த பெருமான் ஓரடி தேவருக்காய் வைத்தான்
மற்றடி மானிடர்க் கிட்டான் ஈற்றடியென் தலையிட்டபின்னே
மாற்றடி தேடிப் போமோ சேற்றிலே உழலலாமோ
போற்றினேன் நாளுமுன்னை காஞ்சிமா நகருளானே !!

**கமலவல்லி நாயிகா சமேத கார்வான பரப்ரஹ்மணே நம :**
**நிலமங்கைவல்லி நாயிகா சமேத ஜெகதீச பரப்ரஹ்மணே நம :**
**பத்மாமணி நாயிகா சமேத கருணாகர பரப்ரஹ்மணே நம :**

உள்ளானை உணர்வாய் நன்னெஞ்சே ஊரகத்தோடு
உள்ளானை உலக ளந்தானை கார்வானத்து
உள்ளானை நீரகனை காரகனை - காஞ்சிமாநகர்
உள்ளானை உயிராய் உணர்ந்தே !!

**<u>சௌந்தர்ய லக்ஷ்மி நாயிகா சமேத ஆதிவராஹ பரப்ரஹ்மணே நம :
நேர் உருவில்லாவல்லி நாயிகா சமேத நிலா திங்கள் துன்டத்தன் திருவடிகளே சரணம்</u>**

உணர்ந்தேயுன் உடன்பிறந்தாள் இடர் நீக்கினாய் - கள்வனாய்
இருந்தேயுன் அடியார்கள் துயர் போக்கினாய் - நிலாத்துண்டனாய்
இருந்தேயென தாவியகம் உனதாக்கினாய் - காஞ்சிமாநகரிலுனை
உணர்ந்தேன் இனியுன் திருக்குறிப்பே !!

**<u>வேளுக்கைவல்லி நாயிகா சமேத அழகிய சிங்க பரப்ரஹ்மணே நம :</u>**

திருவையே தன்திருவாய் உடையவென் திருமால்
கருவிலே திருவிலா என்பிறப்புக் கிறங்கி
உருவிலே உயர்ந்த உருவாம் அரியுருவங்காட்டி
பெருவதற் கறியபேற்றை எளியதாய் தந்தவள்ளல்
அயனவன் மனையவள் வேகம் காத்து
துயர்நீக்கிய தேவை காஞ்சிமாநகர் கண்டேனே !!

**<u>ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீ பண்டவதூத பரப்ரஹ்மணே நம :</u>**

கண்டேன் மாயவனை மாதவனை மணிவண்ணனை
பண்டே ஐவருக்காய் தூதுவனாய் சென்றகோவை
செந்தேன் மாமலர்தேடும் சோலைமுறல்வண்டினம்போல்
என்தேவனை தேடிநான் கண்டுகொண்டேன் காஞ்சிமாநகரினுள்ளே !!

**<u>பத்மாஸனி நாயிகா சமேத ஆதிகேசவ பரப்ரஹ்மணே நம :
அட்டபுயகரத்தான் திருவடிகளே சரணம்</u>**

காஞ்சிமாநகர் உள்ளானை திருவெட்டெழுத்தில் உறைவானை
மாய்ந்து மாய்ந்தமரரேற்றும் அட்டபுயகரத்தானை, ஆதிமூலனை
அயனரன் காக்கவொண்ணா கரிகாத்த நெடுமாலை, ஆரமுதை
துயரறும் சுடரடியை தொழுதார்க்கில்லை துன்பமே !!

**<u>கோமளவல்லி நாயிகா சமேத யெதோத்தகாரி பரப்ரஹ்மணே நம :</u>**

துன்பமே நீ விலகிப்போவாய் துயவன் திருவடி தொழுதேன்
இன்பத்தை எடுத்துரைத்தான் அடியார்சொல் கேட்டவெம்மான்

இற்றைக்கும் எழுபிறவிக்கும் அவனடியார்க் கடியராகி
உற்றோமேயானேன் தொலைந்ததென் துயரே !!

<u>**மரகதவல்லி நாயிகா சமேத விஜயராகவ பரப்ரஹ்மணே நம :**</u>

துயர்தரும் துயர்தனை தொலைப்பவன் எவனோ
தயரதன் குலத்துதித்த  அணிவிளக் கெவனோ
தசமுகன் தலைபத் தறுத்தவன் எவனோ
அயனரன் இடர்களைக் களைந்தவன் எவனோ
பறவையின் பிறபிறப் பொழித்தவன் எவனோ
உவகையோடு கற்றினம் மேய்த்தவன் எவனோ
உயர்விலா  வெனக்குயர்  வளித்தவன் எவனோ
மயர்விலா தவனடித் தொழுதெழென் மனனே !!

<u>**வைகுந்தவல்லி நாயிகா சமேத வைகுண்டநாத பரப்ரஹ்மணே நம :**</u>

மனமே நீயடைவாய் மதிட்கச்சி விண்ணகரை
தினமே சூழ்ந்தமரர் போற்றும் வைகுந்தனை
எட்டங்கத்துள் எட்டுருவாய் நின்றிருந்து கிடந்தானை
தட்டா தவன் தாளினைப் பணிந்து !!

<u>**ஸ்ரீமதே நிகமாந்த மாஹதேசிகாய நம :**</u>

<u>**மரகதவல்லி நாயிகா சமேத தீபப்ரகாச ப்ரப்ரஹ்மணே நம :**</u>

பணிந்தனர் பிரமனும் அவன்தன் துணைவியும்
பணிந்தனர் உலகுளோர் மற்றும் இமயவர்
பணிந்தனன் உணர்ந்தே விளக்கொளிக் கொளியை
பணிந்தனன் அவனோடு தூப்புல்வாழ் குலமணியை !!

<u>**ப்ரவாளவல்லி நாயிகா சமேத பிரவாளவண்ண பரப்ரஹ்மணே நம :**</u>

பணிந்தவர் பாவமெல்லாம் பவளவண்ணன் போக்கிடுவான்
கனிந்ததன் கடைக்கண்பார்வை என்னுமோர் ஆயுதங்கொண்டே
தெரிந்தவன் நாமம்சொன்னால் தெரியாதே தீவினை போகும்
மறந்தும் புறந்தொழாதே பச்சைவண்ணன் தாளைடைந்தேனே !!

<u>**ராதா ருக்மிணி சத்யபாமா சமேத த்வாரகாதீச பரப்ரஹ்மணே நம :**</u>

அடைந்தவர் அகத்திலே அழகனாய் அமர்ந்தவன்
கடைந்தநல் வெண்ணைக்கு கால்மாற்றி குதித்தவன்
உயர்ந்த உள்ளத்தான் உலகுண்ட பெருவாயன்
சிவந்த சிற்றாடை சீரடியும் சிவப்புடையான்
மலர்ந்த மாமலராள் மார்பினுக்கு ஓரணியாய்
உகந்த திருமார்பன் உலகளந்த சேவடியான்
மயர்ந்த மாவரக்கர் குலமொழிக்க சிலைகுனித்து
கவர்ந்த வெங்கணை காகுத்தன் கார்முகிலான்
பிறந்தவிச் சிராவணத்து உரோகிணியில் - அவனை
பணிந்தார் நாநிலத்தில் உயர்ந்தாரே !!

**<u>வடமதுரா நிவாசாய வாசுதேவ பரப்ரஹ்மணே நம:</u>**

உயர்வினுக்கெல்லாம் உயர்வது கேட்கின் மானிடர்காள்

உயர்வு உயர்வு கண்ணனின் கருணை
அததினினும் உயர்வு அவனின் எளிமை
அததினினும் உயர்வு அவனுரைத்த சாத்திரம்
அனைத்திலும் உயர்வு அவன்பிறந்த சேத்திரமே !

**<u>அரவிந்தவல்லி நாயகா சமேத பத்ரிநாராயண பரப்ரஹ்மணே நம :</u>**

பிறந்ததன் சேத்திரத்தில் குருவாய் உறைந்தவன் எவனோ
அமர்ந்தவன் உடனே சீடனாய் உணர்ந்தவன் எவனோ
இறந்ததும் நிகழ்வதும் பின்வருவதும் அறிந்தவன் எவனோ
சிறந்த மண்ணாம் வதரியாசிராமத்து உள்ளான் அவனை
மறந்தும் புறந்தொழா மாந்தருடனே சென்றே தொழுது
பிறந்ததன் நற்பயனை அடைவாய் நீ நன்னெஞ்சே !!

**<u>பரிமளவல்லி நாயிகா சமேதே பரமபுருஷ பரப்ரஹ்மணே நம:</u>**

அடைவாய் நீ நன்னெஞ்சே பிருதியுட்சென்றதன் இறைவனை
கிடைத்தற்கரிய நவநிதியை குருதிபாயச்சுழற்றிய ஆழிவல்லானை
நகங்கொண்டாகம் பிளந்தானை சங்கரன் போற்றும் நரசிங்கனை
தவஞ்செய் நரநாரணனும் உகக்கும் பிருதியில் வணங்கி !!

**<u>புண்டரீகவல்லி நாயிகா சமேத நீலமேக பரப்ரஹ்மமணே நம :</u>**

வணங்குவர் தேவர்கள் நல்லிமயம்விட்டு கடிநகரேகி
அடங்கிடா கடலைப்போல ரதியும் நதியும் கலந்திடும்
கண்டமென்னும் கடிநகர் நின்றதேவன் நீலமேகனை
கண்டவர் விண்டிலரே காண் !!